# சுற்றுச்சூழல் மற்றும் சமூக அமைப்பு மதிப்பீடு

நிர்வாகச் சுருக்கம்:

1. தமிழ்நாட்டின் வளர்ச்சியானது மூன்று அம்சங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது – நகரமயமாக்கல், பொருளாதார மாற்றம் மற்றும் மூப்படைதல். கடந்த நான்கு தசாப்தங்களில் மாநிலம் வேகமான நகரமயமாக்கத்தைக் கண்டுள்ளது, அதன் நகர்ப்புற மக்கள் தொகை 1991 இல் 19 மில்லியன் (மொத்த மக்கள் தொகையில் 34 சதவீதம்) ஆக இருந்து 2021 இல் 40.3 மில்லியனாக (53 சதவீதம்) உயர்ந்துள்ளது. மாநிலத்தின் பொருளாதாரமும் வேளாண்மையிலிருந்து மாறிவிட்டது; சேவைகள் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 50 சதவீதத்தை பங்களிக்கின்றன, இதனை தொடர்ந்து தொழில்கள்/உற்பத்தி (சுமார் 36 சதவீதம்) மற்றும் இதர பொருளாதாரம் வேளாண்மையிலிருந்து வருகின்றன. தமிழ்நாட்டின் வயதாகுதல் வேகம் இந்தியாவின் வயதாகும் வேகத்தினை விட அதிகமாக உள்ளது. மாநிலத்தின் சராசரி வயது 2021 இல் 35 ஆண்டுகளாகவும் 2026 இல் 37 ஆண்டுகளாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் பெண் தொழிலாளர் பங்களிப்பு விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக இருந்தாலும், பெண்கள் தொடர்ந்து மிகக்குறைந்த ஊதியம் பெறும் முறைசாரா பணிகளிலேயே குறைந்த ஊதியம் மற்றும் தனியார் துறை வேலைகள் மற்றும் நிறுவனங்களிலேயே பெரும்பாலும் பணியமர்த்தப்படுகின்றனர். இருப்பினும், நகரப்புறமாக்கப் பொருளாதாரத்தில், வேகமாக நகரமயமாக்கம் அடைந்து வரும் கிராமப்புற பகுதிகளை (31.1 பங்கு புள்ளிகள்) விட நகர்ப்புற பகுதிகளில் (50.5 பங்கு புள்ளிகள்) பாலின இடைவெளி அதிகமாக உள்ளது, இது கவலைக்குரிய விஷயமாகும். தமிழ்நாட்டில் உள்ள பெண் தொழிலாளர்களில் 40.4 சதவீதம் பேர் உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் பணிபுரிந்தாலும், ஊதிய இடைவெளி கணிசமாக உள்ளது. நிறுவனங்களில் 26 சதவீதம் மட்டுமே அதிகார அளவில் பணிபுரிகின்றனர். இது இந்தியாவிலேயே அதிகமாகும். பெரும்பாலான நிறுவனங்கள் சிறு நிறுவனங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இருப்பினும், அதில் ஒரு குறிப்பிட்ட அளவில் பெண்கள் சுயதொழில் செய்பவர்களாக ( நகர்ப்புறங்களில் 13.6% ஆகவும், 21 சதவீதம் கிராமப்புறங்களில் 21% ஆகவும் உள்ளது). அவர்களும் தங்களது குடும்ப நிறுவனங்களில் பங்கெடுப்பவர்களாக இருக்கின்றனர்.

2. உட்கட்டமைப்பு தடைகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதார திட்டமிடல்ம்முறை ஆகியவை வேளாண் அல்லாத துறைகளில் பெண்கள் வேலைவாய்ப்பு அணுகலைக்

கட்டுப்படுத்துகிறது. அதிக எண்ணிக்கையிலான பெண்கள் சிறந்த வேலைவாய்ப்புகளுக்காக நகர மையங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். வேலைவாய்ப்பில் உள்ள பெண்களில் 15% க்கும் மேற்பட்டோர் குடும்பத்தின் தலைவியாகவும், 10% க்கும் மேற்பட்டோர் குறைந்தது ஒரு குழந்தையையும் கொண்டுள்ளனர். இதனால் தங்குமிட வசதி மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கு பெரும் தேவையும் அதன் குறைபாடு காரணமாக பெண்கள் வேலைக்கு வருவது குறைவதுமாக இருக்கின்றது.. NFHS-5 அறிக்கையின் படி , தமிழ்நாட்டில் 38.1% க்கும் மேற்பட்ட பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாகின்றனர். சிறுஆய்வுகள் பலவற்றின் முடிவுகளும், தொடர்ச்சியான தொல்லைகள், பாதுகாப்பற்ற பொது இடங்கள் மற்றும் பொது போக்குவரத்து ஆகியவை பெண்களின் மொத்த நடமாட்டத்தையும் பாதிக்கின்றன என்று காட்டுகின்றன. 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கியால் நடத்தப்பட்ட பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவிற்கான தடைகளை ஆய்வு செய்வதற்கான அடிப்படை மதிப்பீட்டு ஆய்வின்படி, பெண்களிடையே வேலை செய்ய மிகுந்த விருப்பம் உள்ளது, அது திருமணம் மற்றும் குழந்தை பெறுதல் காரணமாக சிறிது குறைந்து வருகிறது. நிரந்தர, அரசு வேலைகள், சேவை துறை வேலைவாய்ப்புகள், உணவு பதப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு துறைகள் மற்றும் தொழில்முனைவோர் ஆகிய வேலை வாய்ப்புக்களுக்கு பெண்களிடையே வலுவான விருப்பம் உள்ளது. பாதுகாப்பு, வீட்டு வேலைகளின் சுமை மற்றும் குடும்பத்தினரின் ஆதரவின்மை ஆகியவை வேலைவாய்ப்புக்கு பெரும் தடைகளாக உள்ளன. வயதான பெண்களுக்கு வேலைவாய்ப்பு திறன்கள் குறைவாக உள்ளன. இளம் பெண்களுக்கு வேலை விண்ணப்பங்கள் தயாரித்தல், நேர்முகத்தேர்விற்கு தயாராகுதல் மற்றும் டிஜிட்டல் திறன்களுக்கு ஆதரவு தேவை.

அரசுத் திட்டம்:

3. தமிழ்நாடு அரசு, திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் ஆதரவு, கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றினை மேம்படுத்துவதன் மூலம் பெண்களின் பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்தும் பல்துறை திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மாநிலத்தின் பொருளாதார இலக்கினை நிறைவு செய்யும் வகையில்,

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் கொள்கை (ஜனவரி 2024) பெண்களின் மேம்பாட்டிற்கான ஒரு விரிவான திட்டத்தை முன்வைக்கிறது. இது "பெண்களுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தவும், பாலின விதிமுறைகளை மறுசீரமைப்பு செய்யவும், நடத்தை சார்ந்த மாற்றங்களை ஏற்படுத்தவும், பெண்களுக்கு எதிரான பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் வன்முறையை ஒழிப்பதற்கும், பெண்களை பாலினம் சார்ந்த முன்முடிவுகள் அடிப்படையில் அணுகாமல் இருக்க அதிகாரம் அளிப்பதற்கும், மேலும் தலைமை மற்றும் முடிவெடுக்கும் பணிகளை ஏற்றுக்கொள்ளவும் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கவும் ஊக்குவிப்பதற்கும்" நோக்கம் கொண்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு அரசு பாலின உணர்வு கல்வி முறைகள், சுகாதார மற்றும் ஊட்டச்சத்து சேவைகள், பெண் தொழில் நிறுவனங்களுக்கான வணிக வளர்ச்சி ஆதரவு, டிஜிட்டல் கல்வி, நிதி உள்ளடக்கம் மற்றும் திறன்கள் ஆகியவற்றில் இலக்கு வைத்த முதலீடுகளை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

4. பெண்களின் வேலைவாய்ப்பு முயற்சிகளுக்கு பொருத்தமான தமிழ்நாடு அரசின் திட்டங்களில் சில பின்வருமாறு. (i) உயர்கல்வியில் நிதியுதவி வழங்கும் புதுமைப்பெண் திட்டம், ( **HEAS** ) (ii) பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் (**சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு**) (iii) பணிபுரியும் மகளிருக்கென பெண்கள் தங்கும் விடுதிகள் (iv) பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலை தடுக்கும் திட்டங்கள் (v) முதல் தலைமுறை **தொழில்முனைவோர் மற்றும் தொழில் திட்ட மேம்பாட்டு திட்டம் (NEEDS)** (vi) **படித்த இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம் (UYEGP)** (vii) **தமிழ்நாடு ஸ்டார்ட்அப் விதை நிதி (TANSEED)** (viii) பெண்களுக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் (ix) **குறுகிய கால பயிற்சி (STT) மற்றும் முன்னேர்வு கற்றல் அங்கீகாரம் (RPL)** (x) **நான் முதல்வன் திட்டம்.** குறிப்பு: இந்த "திட்டங்கள்" மாநில அரசின் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் என இரண்டையும் கொண்டவை. மேலும் பல்வேறு மாநில அரசு துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இதில் சமூக நலன் மற்றும் பெண்களின் மேம்பாட்டு துறை (DSWWE), தமிழ்நாடு பெண்கள் வளர்ச்சி கழகம் (WDC), தொழில் மற்றும் வணிக துறை, தமிழ்நாடு வேலை செய்யும் பெண்கள் விடுதிகள் கழகம் லிமிடெட் (TNWWHCL), சிறப்பு திட்ட செயலாக்கத் துறை (SPID), சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை (DMSME), தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை திட்ட இயக்கம் (TANSIM), மற்றும் TNSDC ஆகியவை அடங்கும்.

5. இந்த திட்டமானது, தமிழ்நாட்டில் பெண்களுக்கு வேளாண்மை அல்லாத துறைகள் மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் வேலைவாய்ப்புகளையும் தரமான வேலைகளுக்கான அணுகுதலையும் மேம்படுத்தி, ஊக்குவிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் ஆதரவு அளிக்கும் திட்டமாகும். தமிழ்நாட்டில் பெண் தொழிலாளர் பங்களிப்பு விகிதம் (FLFP ) குறைக்கும் முக்கிய தடைகளாவன, (i) திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவில் உள்ள இடைவெளிகள் (ii) தரமான வேலைகளை அணுக பெண்களுக்கான தடைகளாக விளங்குபவற்றினை குறைக்க உதவும் ஆதரவு சேவைகளின் போதாமை (iii) பெண்களுக்கான சிறந்த வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்குத்து திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்தி நிர்வகிக்க இயலாத வரம்பு எல்லைகள். இந்த திட்டம் பெண்களுக்கான சிறந்த தொழிலாளர் சந்தை வாய்ப்புகளை முடிவுகளை மேம்படுத்துமாறும், ஆதரவு சேவைகளை பரவலாக வழங்குமாறும், , மற்றும் பெண்களின் வேலைவாய்ப்பை வலுப்படுத்த திட்டமிடல், செயல்படுத்தல் செயல்முறைகள் ஆகியவற்றினை ஆதரிக்குமாறும் உருவாக்கப்பட்டுள்ளது.

உலக வங்கித்திட்டம்:

6. தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TNWeSafe) PforR திட்டம் ("P") என்பது அரசு திட்டத்தின் (p) துணைத் திட்டமாகும். PforR திட்டம், மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் சந்தை செயல்பாடு மற்றும் பெண்களுக்கு தரமான வேலைகளுக்கான அணுகல் மூலம் FLFP ஐ மேம்படுத்துவதற்கான அரசின் முன்னுரிமைகளுடன் இணைக்கப்பட்டுள்ள,ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் அரசு திட்டங்களை ஆதரிக்கும். 2024–2029 காலகட்டத்தில் அரசு திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டு 832.85 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 621.01 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீடு கொண்ட PforR திட்டம், பெண்களின் தொடர்ந்து வளரும் தேவைகள் மற்றும் உயர் இலக்குகளைப் பூர்த்தி செய்யும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை ஆதரிக்கும், வளர்ந்து வரும் துறைகளின் திறனைப் பயன்படுத்துதல், பராமரிப்பு, வீட்டு வசதி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட சேவைகளை மேம்படுத்துவதற்கான புத்தாக்கத் தீர்வுகளை ஆதரித்தல் மற்றும் அரசு திட்டங்கள் மற்றும் துறைகளில் திட்டமிடலை வலுப்படுத்துதல் ஆகிய்வை இத்திட்ட

நோக்கங்கள் ஆகும். மேலும் மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கான தளத்தினை உருவாக்கும்.

7. முன்மொழியப்பட்ட திட்டமானது, வேளாண்மை அல்லாத துறைகள் உட்பட, வளரும் துறைகளில் தரமான வேலைகளை பெண்கள் அணுகுவதற்கான வாய்ப்பை மேம்படுத்துவதற்கும், குறைந்த FLFP ஐ கையாள்வதற்கான அரசின் முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கும். பெண்களின் வேலைவாய்ப்பு குறித்த பாரம்பரிய அரசு திட்டங்களானவை, திறன் மேம்பாடு, கிராமப்புற வாழ்வாதாரம், தொழில்முனைவோர் மேம்பாடு அல்லது பள்ளியிலிருந்து வேலைக்கு மாற்றம் தொடர்பான செயல்பாடுகள் மூலம் துறை சார்ந்த உதவி ஆகியனவற்றைக் கடைப்பிடித்து வருகின்றன. இந்த திட்டமானது, பெண்கள் தரமான வேலைகளை அணுகுவதை தடுக்கும் சிக்கல்களை கையாள்வதற்காக, மாற்றுத்திட்டமிடல், ஒருங்கிணைந்த திட்டமிடல் அணுகுமுறையை முன்மொழிகிறது: (i) பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் மாவட்ட அளவிலான மகளிர் வேலை வாய்ப்புத்திட்டங்கள் குறித்த மாநில தலைமையிலான தளத்தின் மூலம் அரசின் பல்வேறு நிலைகளில் திட்டமிடல் திறன்களை வலுப்படுத்துதல் (ii) வேளாண்மை அல்லாத துறைகள் மற்றும் தொடர்புடைய புதிய துறைகளுடன் இணைக்கப்பட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் ஆதரவை மேம்படுத்துதல் (iii) (a) பெண்களின் பாதுகாப்பு உட்பட பாலியல் வன்முறையைக் தடுப்பதற்கான நடவடிக்கைகள், பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் நடைமுறையில் இருக்கும் சட்டங்களை கடைப்பிடிப்பது, (b)குறைவான செலவில் தங்கும் வசதிகளை அணுகுதலை எளிதாக்குதல், மற்றும் (c) பராமரிப்பு சேவைகளை அணுகுதல் போன்ற துணைபுரிதல் சேவைகளின் வழங்கலை மேம்படுத்துதல். இந்த திட்டத்தின் நேரடி பயனாளிகள் தமிழ்நாட்டில் உள்ள இளம்பெண்கள் மற்றும் வேலை வயது பெண்கள் ஆவார்கள். பிற இலக்கு குழுக்களில் மாவட்ட சமூகநலத்துறையின் தொழில்துறை கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள், வேளாண்மை அல்லாத துறைகளில் பணிபுரிபவர்கள், உயர்கல்வியில் உள்ள பெண்கள், பிரசவம் மற்றும் தனிப்பட்ட காரணங்களால் பணி இடைவெளி எடுத்துக்கொண்ட பெண்கள், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், திருநங்கைகள், பாலியல் தொழிலாளர்கள், சட்டத்துடன்

முரண்படுபவர்கள், தனித் தாய்மார்கள் மற்றும் ஆதரவற்ற தாய்மார்கள் போன்றோர் அடங்குவர்.

8. இத்திட்டமானது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும். இருப்பினும், அதிக சவால்களையும் அதிக வாய்ப்புகளையும் கொண்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், எடுத்துக்காட்டாக, விரிவடையும் தொழிற்சாலை குழுமங்களைச் சுற்றிய பகுதிகள் உட்பட நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற பகுதிகள். வேளாண்மை அல்லாத துறைக்குள், இந்த திட்டம் குறைந்த சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை கொண்ட துறைகள் உட்பட, அதிக வளர்ச்சிப் பாதையைக் கொண்ட துணை துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும், எடுத்துக்காட்டாக, ஆடை, தோல் அல்லாத காலணிகள், ஆட்டோமொபைல்கள், பசுமை வேலைகள் மற்றும் டிஜிட்டல் துறைகள் போன்றவை. திட்டத்தின் செயல்படுத்தல் மற்றும் பரவலும் தலையீடுகளின் தன்மை மற்றும் வகைகளைப் பொறுத்தும் மாறுபடும். உதாரணமாக, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை அணுகுவது தொடர்பான தலையீடுகள் நகர்ப்புற பகுதிகளில் கவனம் செலுத்தும், மேலும் மாநிலம் முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். திறன் மேம்பாடு, தொழில்முனைவோர், பங்கீட்டு செயல்பாடுகள், கொள்கை மற்றும் தளங்கள் போன்ற பொதுவான பகுதிகள் தொடக்கத்திலிருந்தே பரவலான சென்றடைதலைக் கொண்டிருக்கும்.

9. இந்த திட்டம் ஒரு அரசு திட்டத்தின் துணைத் திட்டமாகும். PforR திட்டத்தில் இருந்து விலக்கப்பட்ட அரசு திட்டத்தின் கூறுகளை பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்:

- வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரங்கள் மற்றும் நிறுவனங்கள்
- பொதுப்பணித் துறையில் வேலைவாய்ப்பு
- கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டங்களில் முதலீடுகள்
- சுற்றுச்சூழல் மற்றும் சமூக அமைப்பு மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்ட விலக்கு பட்டியலில் உள்ள முதலீடுகள்
- பெண் பயனாளிகளை இலக்காக வைக்காத முதலீட்டுத்திட்டங்கள்.

10. திட்டத்தின் வளர்ச்சி இலக்கு (திட்ட வளர்ச்சி இலக்கு = Program Development Objective) வேளாண்மை அல்லாத துறைகளில் தரமான வேலைகளை பெண்கள் அணுகுவதை மேம்படுத்துவதாகும். திட்ட வளர்ச்சி இலக்கின் (திட்ட வளர்ச்சி இலக்கின் வெற்றி பின்வரும் சுட்டிக்காட்டிகளின் முடிவுகளைப் பொறுத்தது:

- i. பாலின சமத்துவத்தால் (பாலின வாரியாகவும் இளைஞர்களாகவும் பிரிக்கப்பட்டது) அதிகம் பயனடைந்த மக்கள் (சதவீதம்) (புதிய நிறுவன ஸ்கோர் கார்டு)
- வேளாண்மை அல்லாத துறைகளில் ஊதிய வேலை அல்லது தன்னார்வ தொழிலில் ஈடுபட்டுள்ள பயனாளி பெண்கள் (அனைத்து பயனாளி பெண்களின் சதவீதம்) (வளரும் துறைகள் – பிற துறைகள் என பிரிக்கப்பட்டது; வயது – 18–29, 30–59 வயது)
- iii. வேளாண்மை அல்லாத துறைகளில் ஊதிய வேலை அல்லது தன்னார்வ தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் முறையே சம்பள வருமானம் அதிகரிப்பு அல்லது விற்பனை அளவு/மொத்த வருவாய் அதிகரிப்பு என தெரிவிக்கும் பயனாளி பெண்கள் (சம்பளம் பெறும் அல்லது தன்னார்வ தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து பயனாளி பெண்களின் சதவீதம்)
- iv. உதவி சேவைகளைப் பயன்படுத்தும் பயனாளி பெண்கள் (அனைத்து பயனாளி பெண்களின் சதவீதம்)
- v. 'பெண்களின் தரமான வேலைவாய்ப்பு திட்டங்கள்' (WQEP களை) உருவாக்கி செயல்படுத்திய மாவட்டங்கள் (எண்ணிக்கை)

11. திட்ட முடிவுப் பகுதிகள் (RA): திட்டமானது PDO மற்றும் பிற திட்ட முடிவுகளுடன் இணைக்கப்பட்ட மூன்று இணை நிறைவு முடிவுப்பகுதிகளை (RA) ஆதரிக்கும். அவை:

- (i) **வேலைவாய்ப்பு (EMPLOY):** வேளாண்மை அல்லாத துறைகள் உட்பட புதிய துறைகளில் பெண்களுக்கான தொழிலாளர் சந்தை செயல்பாட்டை மேம்படுத்துதல்; (ii) **இயக்கு (ENABLE):** பெண்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான உதவி சேவைகளின் மேம்படுத்தப்பட்ட வழங்கல்; மற்றும் (iii) ** **அதிகாரமளி** (EMPOWER):** பெண்களின் வேலைவாய்ப்புக்கான மாநில திறன்கள், தொழில்நுட்ப பங்காளித்துவங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புகள் வலுப்படுத்துதல்.
- திட்ட முடிவு பகுதிகளின் (RA) விரிவான விளக்கம் பின்வருமாறு:

I. **RA1 வேலைவாய்ப்பு (EMPLOY): புதிய துறைகளில் பெண்களுக்கான மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் சந்தை செயல்பாடு** – RA 1: தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கான திறன் பயிற்சி திட்டங்கள், தொழில் ஆதரவு சேவைகள், உள்ளுறை சேவைகள் ( Incuabtion Services),

தொழில் விரைவாக்கச் சேவைகள்( Acceleration Services) ஆகியவற்றின் அணுகல், தொடர்புத்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) **திறன் மேம்பாட்டு ஆதரவு:** திறன் பயிற்சியினைப் பொறுத்து, இந்த திட்டம் 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு தொழில்நுட்ப, சமூக, உணர்ச்சி, டிஜிட்டல் மற்றும் நிதியறிவு படிப்பு திறன்களில் பயிற்சி அளிக்கும், இது அவர்களை வேலைக்கு தயாராக இருக்கவும், அரசின் தற்போதைய திட்ட முயற்சிகளுடன் இணைக்கவும் உதவும். இதனுடன் தொழில் ஆலோசனை, பயிற்சி வாய்ப்புகள், வேலை தேடல் வசதிகள் மற்றும் பணியமர்த்தல் ஆதரவு போன்ற தொழில் ஆதரவு சேவைகளின் தொகுப்பு வழங்கப்படும். தேவைக்கேற்ப இந்த துறைகளில் படிப்புகள் உருவாக்கப்படும் அல்லது மேம்படுத்தப்படும்.

(b) **தொழில்முனைவோர் ஆதரவு:** இந்த திட்டம் வேளாண்மை அல்லாத துறைகள் உட்பட தொடர்புடைய வளரும் துறைகளில் பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் எதிர்கால தொழில்முனைவோரை ஆதரிப்பதற்கான தரமான சேவைகளை வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தும். இதில் தொடக்க நிலை பெண்கள் தலைமையிலான வணிகளுக்கான உள்ளுறை வசதித்திட்டங்கள், வணிகம், சட்டம், டிஜிட்டல் மற்றும் பிற ஆதரவு சேவைகளை அணுகுவதை வலுப்படுத்த உள்ளுறை சேவைகள் ( Incuabtion Services), தொழில் முடுக்க சேவைகள்( Acceleration Services) மூலம் வழங்கப்படும். பெண் தொழில்முனைவோர் மற்றும் பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான நிதி ஆதரவும் வழங்கப்படும். இதில் புதுமையான நிதி ஆதரவு விருப்பங்களுக்கான அணுகலை வசதியாக்குதல், நிதி நிறுவனங்களுடன் இணைப்புகளை செயல்படுத்துதல் மற்றும் தனியார் துறையில் இருந்து நிதியை திரட்டுதல் ஆகியவை அடங்கும். இந்த திட்டம் பல்வேறு பிரிவினர் பெண்களுக்கு, குறிப்பாக ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, தனிப்பயனாக்கப்பட்ட தொழில்முனைவோர் ஆதரவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

II. **RA 2 இயக்கு (ENABLE): பெண்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான உதவி சேவைகளின் மேம்படுத்தப்பட்ட வழங்கல்** :

RA2 இன் கீழ், திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் சென்றடையச்செய்தல், தரம் மற்றும் உதவி சேவைகளின் தாக்கத்தை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பை அமைப்பதுவும், மாநிலம் முழுவதும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான முழுமையான பராமரிப்பு உதவி அமைப்புகளுக்கான அமைப்பை உருவாக்குவதையும் ஊக்குவிக்கப்படும். இந்த சேவைகளில் பொது இடங்கள் மற்றும் பணியிடங்களில் பாதுகாப்பு/வன்முறை தடுப்பு, பாதுகாப்பான போக்குவரத்து, குறைவான செலவில் தங்குமிட வசதி மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆகியவை அடங்கும்.

இந்த திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட அளவில் மகளிர் வேலைவாய்ப்புத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த, மத்திய கால திட்டமிடல் மற்றும் முதலீடு ஒன்றிணைப்பை ஊக்குவிக்கும் (ஊக்குவிக்கும் = incentivize). குழந்தை பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான மண்டல அளவிலான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும். மகளிர் வேலைவாய்ப்புத்திட்டத்தின் முடிவுகளின் படி மானியங்கள் உட்பட குறைந்த செலவில் தங்குமிட வசதிக்கான முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும், நகர்ப்புற பகுதிகளிலும் சுற்றிலும் உள்ள குடியேறும் மற்றும் பிற பெண் தொழிலாளர்களுக்கான விடுதி வசதிகள் மற்றும் குறுகிய கால விடுதி வசதியினை அணுகுவதை வலுப்படுத்தும். தனியார் மற்றும் பொது சேவை வழங்குபவர்களுடனான ஒத்துழைப்பின் மூலம் பெண்களுக்கான சிறப்பு போக்குவரத்து வழிமுறைகள் ஆதரிக்கப்படும்.

மேலும், திட்டம் ஒரு விரிவான தகவல் தொடர்பு திட்டத்தின் உருவாக்கம் மற்றும் செயல்படுத்தலையும் ஆதரிக்கும். இதில் தகவலை அணுக எளிதாக உதவி எண் அமைப்பு, தனிப்பயனாக்கப்பட்ட IEC (IEC = Information, Education and Communication) உருவாக்கம் மற்றும் லாபகரமான வேலைவாய்ப்பு வாய்ப்புகளில் பெண்களை ஆதரிப்பதின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பாலியல் வன்முறை தடுப்பு உட்பட சமூக-பண்பாட்டு விதிமுறைகளை கையாள்வது ஆகியவை அடங்கும்.

III. **RA 3 அதிகாரமளி (EMPOWER): பெண்களின் வேலைவாய்ப்புக்கான வலுவூட்டப்பட்ட அரசின் திறன், தொழில்நுட்ப பங்கெடுப்புக்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புகள் –**

RA3 இன் கீழ், மாநில அரசு பெண்கள் கொள்கையை செயல்படுத்துவதற்கும் FLFP ஐ அதிகரிப்பதற்கான முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கும் பொதுவான முடிவு கட்டமைப்பு மற்றும் பணிகளை உருவாக்கும். இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை (SWWE) ன் கீழ் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் பெண்களின் வேலைவாய்ப்புக்கான அரசின் கட்டுப்பாட்டில் தளத்தினை அமைப்பது, பல துறைகளின் திட்டங்களின் செயல்படுத்தல் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் ஆதாரங்களில் அடிப்படையிலான முடிவுகள் எடுப்பதை ஊக்குவிப்பதற்கும் இது வழிகாட்டும். இந்தத்தளமானது திட்டச் செயல்பாட்டுத்துறைகள், பொது நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், CSO க்கள் (CSO = Civil Society Organizations), வளர்ச்சி பங்களிப்பாளர்கள், பெண் தொழில்முனைவோர் மற்றும் தொழில் சங்கங்களை ஒன்றிணைக்கும். மேலும், மாவட்ட அளவிலான தளங்களை உருவாக்கி பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கும் வழிகாட்டும்.

இந்த செயல்பாட்டு முடிவானது மாநில அளவிலான கொள்கைகள் மற்றும் ஒழுங்குக் கட்டமைப்பின் உருவாக்கம், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் செயல்படுத்தல் திட்டம் ஆகியவற்றினை ஆதரிக்கும். இது தனியார்/பொது துறை மற்றும் அரசுத் துறைகளை ஈடுபடுத்தி, பயிற்சி, பயிற்சி வாய்ப்புகள், கைத்தொழில் பயிற்சி மற்றும் பணி வாய்ப்புகளை வசதியாக்குவதற்கான இலக்கு வைத்த பங்கெடுப்பாளர் அமைப்புகள் போன்றவற்றினை ஏற்படுத்தும். . பல துறை பொருளாதார சேர்க்கை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்க செயல்பாடுகளுக்கான ஒருங்கிணைந்த மற்றும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வழங்கல் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளின் வளர்ச்சியை இது உள்ளடக்கும். மேலும், திறன் மேம்பாடு, அறிவு பகிர்வு மற்றும் அதிகாரிகளின் பயிற்சிக்காக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்.

**திட்ட செயல்படுத்துதல்:**

12. தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TNWeSafe) திட்டம்) சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத் துறையின் கீழ் (எஸ்.பி.ஐ.டி) செயல்படுத்தப்படும். இது திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளில் முன்னுரிமை பெற்ற துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்யும். இந்த

திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடைமுறைப்படுத்துதல் துறைகளாக சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத் துறை (SWWED), சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (MSMED) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TN–SDC) ஆகியவை இருக்கும்.மாவட்ட அளவில், SWWED, MSME மற்றும் TNSDC ஆகிய துறைகளின் மாவட்ட அலுவலகங்கள் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கும். மாநில அளவில், ஒரு திட்ட வழிக்காட்டுதல் குழு (PSC – Program Steering Committee) அமைக்கப்படும். இதற்கு வளர்ச்சி ஆணையர் தலைமை தாங்க, நிதித் துறை, SPID, SWWED, MSMED, TN–SDC நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். மாநில அளவிலான திட்டங்களுக்கு இந்தக் குழு மேற்பார்வை செய்யும் மற்றும் துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்யும். இக்குழு ஆண்டுதோறும் கூடி, திட்ட முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து, ஆண்டு செயல் திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்து, துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை உறுதி செய்யும்.

13. மாநில அளவில், SPID யின் கீழ் ஒரு திட்ட மேலாண்மை பிரிவு (PMU) நிறுவப்படும். இது திட்ட இயக்குநர் (PD) தலைமையில் இயங்கும், அவர் செயலாளர், SPID மூலம் வளர்ச்சி ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார். PMU , நடைமுறியப்படுத்துதல் நிறுவனங்களுடன் இணைந்து இந்த திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் மேலாண்மைக்கு பொறுப்பாக இருக்கும். இது பொது மேற்பார்வை, தொழில்நுட்ப ஆதரவு, மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) மற்றும் ஒட்டுமொத்த திட்டமிடலை வழங்கும்.

மாவட்ட அளவில் திட்டக் குழுவில் SWWED, MSME மற்றும் TNSDC ஆகிய துறைகளிலிருந்து பணியமர்வு செய்யப்படும் அதிகாரிகள் இருப்பார்கள். மாவட்டக் குழு திட்ட இயக்குநர், மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகம் வழியாக மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். PMU இந்த திட்டத்தின் கீழ் IPF கூறுபாடுகளை செயல்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கும்.

**சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு: பாதிப்புகள், நன்மைகள் மற்றும் வாய்ப்புகள்**

14. திட்ட நடவடிக்கைகளின் போது அல்லது அதன் காரணமாக எதிர்பார்க்கப்படும் மிகவும் பரவலான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பின்வருவனற்றுடன் தொடர்புடையவை:

(i) தற்காலிக கட்டுமானம் (புதுப்பித்தல் செயல்பாடுகள்) தொடர்பான தாக்கங்கள் – தூசி, ஒலி, காற்று, கழிவு மற்றும் நீர் மாசுபாடு.

(ii) சிறு கட்டுமான/மேம்பாட்டு பணிகளில் (வேலை செய்யும் பெண்களுக்கான விடுதிகள், உள்ளுறை மையங்கள், பராமரிப்பு வசதிகள், வாழ்வாதார மேம்பாட்டு மையங்கள் போன்றவை) ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் செயல்பாட்டு பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு தொடர்பானவை.

(iii) திட்டத்தின் கீழ் புதிய துறைகள் மற்றும் வேளாண்மை அல்லாத துறைகளில் செயல்பாடுகள் அதிகரிப்பதாலும், தகவல் தொழில்நுட்ப கருவிகளை கொள்முதல் செய்வதாலும் அதிகரித்த கழிவு (மின்சார கழிவு, துணி கழிவு, கட்டுமான மற்றும் இடிப்பு கழிவு, பிற ஆபத்தான கழிவுகள்) அப்புறப்படுத்துதல்.

(iv) குழந்தைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு மையங்கள் (பராமரிப்பு பொருளாதாரம்) போன்ற வசதிகளில் அதிகரித்த மற்றும் புதுப்பிக்க இயலாவள ஆதார உபயோகம் (எரிசக்தி, நீர், தவறான கழிவு அப்புறப்படுத்துதல்).

15. **முறைமை மதிப்பீடு மற்றும் முக்கிய குறைபாடுகள்:**

சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மை (E&S) தொடர்பாக திட்டத்திற்கு கடன் பெறுபவர் கொண்டுள்ள கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் ஆகியவை விரிவானவை மற்றும் திட்டத்தின் நிலைத்தன்மைக்கு பங்களிப்பதாக ESSA மதிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், செயல்படுத்தும் நிறுவனங்களின் திறன் குறைபாடு காரணமாக, இருக்கும் விதிமுறைகளை போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றி, ஒழுங்கற்ற முறையில் செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை இடம்பெறுகின்றன. இது, கள நிலை செயல்பாடுகளின் போது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். திட்டத்தை செயல்படுத்தும் துறைகள், சுற்றுச்சூழல் உறுதித்தன்மை, சிக்கல்கள், மற்றும் செயல்முறைகள் குறித்து நல்ல புரிதலைக் கொண்டிருந்தாலும், முன்மொழியப்பட்ட முதலீடுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் ஆபத்துகளை கணித்தல், குறைக்கத் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான உள் (மனித மற்றும் தொழில்நுட்ப) திறன் குறைவாகவே உள்ளது

16. திட்டத்தின் மொத்த சுற்றுச்சூழல் தாக்கம் நேர்மறையானதாக இருக்கும். இந்த திட்டம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்கும். அவையாவது:

a) வேலைவாய்ப்பு சந்தையில் பசுமைசார் வேலைகளுக்கான திறன்களை மேம்படுத்துவது பசுமைசார் நடவடிக்கைகளில்

முதலீடுகளை பாதிக்கும் மற்றும் பசுமைசார் பொருளாதார மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கு உதவும்.

b) புதிய துறைகளில் சுற்றுச்சூழல் நட்புப்புணர்வு கொண்ட பார்வை முறைகளை கடைப்பிடிப்பது, வேலைவாய்ப்பு பெறும் பெண்களில் (ஆடை தயாரிப்பு, துணி தொழில், வாகனங்கள், டிஜிட்டல் துறைகள், தோல் அல்லாத காலணிகள்) அதிகரித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பசுமைசார் திறன்கள் மற்றும் நிலைத்தன்மை நிர்வகிக்கப்படும். முதியோர் மற்றும் குழந்தை பராமரிப்பு வசதிகள் ஆகியவை காலநிலை மாற்றத்திற்கு நன்மைகளைத் தரும் மற்றும் மாநிலத்தின் காலநிலை மாற்றம் தணிப்பு திட்டத்திற்கு பங்களிக்கும்.

c) திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, திறன் மேம்பாடு (சிறப்பு சுற்றுச்சூழல் படிப்புகள் மற்றும் கட்டாய பயிற்சிகள் மூலம்) மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் அறிவு மற்றும் விழிப்புணர்வு உருவாக்கம் ஆகியவை பல்வேறு தகவல் சேனல்கள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிக சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு வழிவகுக்கும்.

d) பல்வேறு பயிற்சி/ஒருங்கிணைப்பு நிறுவனங்களின் மேம்படுத்தப்பட்ட நிறுவன திறன்கள், தற்போதுள்ள கட்டமைப்பு மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும், இதன் மூலம் போதுமான திட்டமிடல் இல்லாத கட்டமைப்பால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்கும்.

e) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரத்தை நம்பி இருப்பதைக் குறைப்பது, லாபகரமான வேலைவாய்ப்பைத் தேடும் பெண்களுக்கு காலநிலை தொடர்பான அபாயங்கள் மற்றும் பொருளாதார பாதிப்புகளை சிறப்பாக நிர்வகிக்க உதவும்.

## 17. சமூக ஆபத்துகள், நன்மைகள் மற்றும் வாய்ப்புகள்

**ஆபத்துகள்:** சூழலியல் ஆபத்துகள், நிறுவன திறன் மற்றும் பிற நற்பெயர் தொடர்பான ஆபத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த திட்டத்தால் எந்த குறிப்பிடத்தக்க சமூக தாக்கங்களும் ஏற்ப₹ட வாய்ப்பில்லை. அடையாளம் காணப்பட்ட முக்கிய சமூக ஆபத்துகள் பின்வருவனற்றைச் சார்ந்தவை:

(i) பின்தங்கிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை ஒதுக்குவதற்கான ஆபத்து (ii) E&S (சுற்றுச்சூழல் மற்றும் சமூக) ஆபத்துகளை நிர்வகிப்பதில் மாவட்டங்களுக்கு இடையேயான மற்றும் மாவட்டத்திற்குள் உள்ள வேறுபாடுகள் (iii) பாலியல் சுரண்டல் மற்றும் துன்புறுத்தல் (SEA)/பாலியல் துன்புறுத்தல் (SH)/ பாலின அடிப்படையிலான வன்முறை (GBV) தொடர்பான குறைகளை நிவர்த்தி

செய்வதற்கான போதுமான அமைப்புகள் இல்லாதது உட்பட துண்டாடப்பட்ட குறைதீர்ப்பு நிவாரண வழிமுறைகள் (iv) திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்கள், தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் தொடர்பு கொள்வதால் பெண் பயிற்சியாளர்கள் மற்றும் பயனாளிகளுக்கு SEA/SH ஆபத்துகள் (v) பங்குதாரர் மற்றும் சமூக பங்களிப்பு திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பில் உள்ள குறைபாடுகளால் ஏற்படும் பிற சமூக ஆபத்துகள்

பெண்களுக்கான விடுதிகளை மேம்படுத்துவது போன்ற சிவில் வேலைகளால் ஏற்படும் சமூக தாக்கங்கள் சிறியவை மற்றும் தலைகீழாக மாற்றக்கூடியவை. தணிக்கையின் முடிவுகள் சமூக ஆபத்து "மிதமானது" என்று குறிப்பிடுகின்றன. மேலும், PforR கருவியைப் பயன்படுத்தி நிதியளிப்புக்கு தகுதியற்ற நடவடிக்கைகள் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதையும் தணிக்கை உறுதி செய்துள்ளது, மேலும் 10வது அத்தியாயத்தில் விலக்கல் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

## 18. நன்மைகள் மற்றும் வாய்ப்புகள்:

திட்டத்தின் சாத்தியமாகும் சமூக நன்மைகள் மற்றும் வாய்ப்புகள் பின்வருவனற்றை உள்ளடக்குகின்றன:

(a) பழங்குடியினர் (STக்கள்), பட்டியல் இனத்தவர் (SCக்கள்), மாற்றுத்திறனாளிகள் (PwDs), திருநங்கைகள் உள்ளிட்ட பல்வேறு பாதிக்கப்படக்கூடிய மற்றும் வறிய குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தல்.

(b) பெண்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் பங்களிப்பு, மாவட்ட அளவில் மேம்படுத்தப்பட்ட திட்டமிடல் திறனுக்கு வழிவகுக்கும்.

(c) மாநிலத்தின் குறைதீர்ப்பு நிவர்த்தி வழிமுறையின் (GRM) செயல்பாடு மற்றும் அணுகலை வலுப்படுத்துதல்.

(d) பாலியல் சுரண்டல் மற்றும் துன்புறுத்தல் (SEA/SH) ஆபத்துகளை நிர்வகிப்பதற்கான மாநில அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல்.

(e) கட்டுமான தளங்களில் மேம்படுத்தப்பட்ட தொழிலாளர் மேலாண்மை, தொழிலாளர் வருகை தொடர்பான ஆபத்துகளை மேம்படுத்தப்பட்ட மேலாண்மை.

## நிறுவன மதிப்பீடு

**19. சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத் துறை (SPID):** SPID என்பது னான் முதல்வன் போன்ற பிற திட்டங்களுக்களுக்கு, துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்புக்கான முதன்மை முகமை ஆகும். PMU (திட்ட மேலாண்மை பிரிவு) SPID கீழ் இயங்கும், மேலும் அது செயலாளர், SPID அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் திட்ட இயக்குநர் (PD) அவர்களால் நிர்வகிக்கப்படும். PMU செயல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து திட்டத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் மேலாண்மை, பொது மேற்பார்வை, தொழில்நுட்ப ஆதரவு, மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E), வள ஆதார மேலாண்மை மற்றும் ஒதுக்கீடு ஆகியவற்றிற்கு பொறுப்பாக இருக்கும். தற்போது, PMU விடம் E&S (சுற்றுச்சூழல் மற்றும் சமூக) ஆபத்து மேலாண்மைக்கான உள் திறன் இல்லை. எனவே, திட்ட முதலீடுகளுக்கான E&S தாக்கங்களின் தேவையான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (TNSDC)

20. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) என்பது 2013 ஆம் ஆண்டு முதல் SPID கீழ் செயலாற்றி வரும் பிரிவு 8 நிறுவனமாகும். இது தமிழ்நாடு அரசால் திறன் மேம்பாட்டிற்கான மாநில அரசின் நிறுவனமும் ஆகும். தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் (NSDC) கீழ் இயங்கும் தேசிய சான்றிதழ் வழங்கும் அமைப்பான துறை திறன் குழுமத்தால் (SSC) சான்றிதழ் பெற்ற பயிற்சி பெற்ற நிறுவங்களிடன் கூட்டமவில் TNSDC செயல்படுகிறது. TNSDC பயிற்சி பங்களிப்பாளர்கள் சான்றிதழ் வழங்கவும், பாடத்திட்டத்தை வடிவமைக்கவும் தகுதி பெற்றது. மேலும், நிறுவனங்களின் செயல்பாடுகளையும் கண்காணிக்கிறது. பயிற்சி மையங்களில் பயோமெட்ரிக் வருகைப்பதிவேட்டு முறை , மற்றும் சிசிடிவி கண்காணிப்பு ஆகிவற்றினை கொண்டுள்ளது. பதிவு மற்றும் வருகை, பயிற்சி வெற்றிகரமாக முடித்தல் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய தரவுகள் மூலம் பயிற்சி பங்காளிப்பாளர்காளின் செயல்பாட்டை மதிப்பீடுசெய்வதற்கான வழிகாட்டுதல்கள் உள்ளன. காலஅவகாச இடைவெளியில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ள ஒரு விரிவான கண்காணிப்பு முறை உள்ளது. பெண் பயனாளிகள் மற்றும் பிற வறிய குழுக்களை இலக்காகக் கொண்ட பயிற்சி திட்டங்களையும் TNSDC வழங்குகிறது. POSH சட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய TNSDC இல் ஒரு உள் குழு (ICC) உள்ளது. சுற்றுச்சூழல் அல்லது சமூக ஆபத்து மேலாண்மைக்கான எந்தவொரு பணியாளரையும் TNSDC கொண்டிருக்கவில்லை

21. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) கீழ் இயங்கும் "நான் முதல்வன்" திட்டம், அரசு அல்லது அரசு உதவி பெறும் கல்லூரிகளின்

(மருத்துவக் கல்லூரிகள் தவிர) மாணவர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குகிறது. இந்தப் பயிற்சிகள் இளங்கலை பட்டப்படிப்பில் இணைக்கப்பட்டு மதிப்பீட்டு புள்ளிகளைக் கொண்டிருக்கும். தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகள், மாநிலம் முழுவதும் 20க்கும் மேற்பட்ட துறைகளான சுகாதாரம், ஊடக மற்றும் பொழுதுபோக்கு, பசுமை வேலைகள், சில்லறை விற்பனை, அழகுசாதனம், கட்டுமானம், மின்னணு பொருட்கள் மற்றும், வன்பொருள், உணவு பதப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், தோல், விநியோகம் போன்ற துறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. தொழிற்துறை தேவையை உறுதிசெய்யவும், படிப்புகள் சந்தை தேவைகளுக்கு ஏற்றவாறு இருப்பதை உறுதிப்படுத்தவும், தொழில் துறை பிரதிநிதிகளுடன் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கலந்தாய்வுகள் நடத்தப்படுகின்றன. அரசு துறைகள், திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை கூட்டமைப்புக்களுடன் இணைந்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த மற்றும் வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட திறன் தொடர்பான பயிற்சி வழங்குவதற்கான முதன்மை முகவையாகவும் TNSDC செயல்படுகிறது. பயிற்சி நிறுவனங்கள் துறை திறன் குழுமம் (SSC) மூலம் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் பெற்றிருக்கும்.

22.சுற்றுச்சூழல் மேலாண்மை:

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தில் (TNSDC) சுற்றுச்சூழல் மேலாண்மை திறன் மேம்பாடு குறித்த சிறப்பு மற்றும் செயல்பாட்டு தலையீடுகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும், மாநிலத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் பசுமை வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதில் இந்த நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை கவனிப்பது அவசியம். தங்கள் திட்டங்கள் மற்றும் திட்டங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான கருத்துக்களை கையாள்வதற்கான தேவையான திறன்கள் மற்றும் அறிவை ஊழியர்களுக்கு வழங்குவது என்ற நோக்கத்தோடு, பல்வேறு பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து TNSDC திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக செயல்பட்டு வருகின்றது.

23. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் (TNSDC) பசுமைசார் வேலைவாய்ப்பு மேம்பாட்டு முயற்சிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. மேலும், புதிய துறைகளில் வேலைவாய்ப்புகளில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை தொடர் இயல்பாகக் கொண்டு வருவதற்கான தேவையையும் இந்த முயற்சி அங்கீகரிக்கிறது. தற்போது வேலைவாய்ப்புத் திறன் பெற்ற இளைஞர்களுக்கான பல்வேறு நடந்து கொண்டிருக்கும் பயிற்சி திட்டங்களில் "பசுமைப்படுத்துதல்" அணுகுமுறைகளை இணைப்பதை இந்த நிறுவனம் ஏற்கனவே

தொடங்கியுள்ளது. சூரிய மின்சக்தி தொழில்நுட்பத்தில் திறன் மேம்பாட்டு படிப்புகள் (குறிப்பாக சோலார் பவர் டிசைன், சோலார் பவர் இன்ஸ்டாலேஷன் (எலக்ட்ரிகல்) மற்றும் சோலார் பவர் இன்ஸ்டாலர் (சூர்யா மித்ரா) ஆகியவற்றுடன் தொடர்புடையவை) எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சூரிய மின்சக்தி தொழில்நுட்பத்தில், தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் பசுமை திறன் பயிற்சி வழங்குநர்கள் சென்னை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ளன. தமிழ்நாடு இளைஞர்களுக்கான தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கான திறன் மேம்பாட்டு மேடையான "நான் முதல்வன்" திட்டத்தில், மின்சார வாகன இயக்கம் குறித்த படிப்புகள் உள்ளன. பசுமை தொழில்நுட்பங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய திறன்களை தனிநபர்களுக்கு வழங்குவதன் மூலம், தமிழ்நாட்டில் பசுமை வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான பங்களிப்பை TNSDC தொடங்கியுள்ளது. மேற்கூறிய எடுத்துக்காட்டுகள், தனது செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் கருத்துகளை இணைப்பதற்கான TNSDC இன் முயற்சிகளை விளக்குகின்றன.

24. சமூக நலன் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை – சமூக நலன் ஆணையர் (SWWED)

சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத்துறை (SWWED) என்பது பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக திட்டங்களை செயல்படுத்துகிறது. மேலும், இந்தத்துறை (Commissionerate of Social Welfare – CSW) பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளையும் நிர்வகிக்கிறது. ஆணையர் அலுவலகம் பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட நல திட்டங்களை கையாள்கிறது. மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அலுவலகம் தங்கள் மாவட்டத்திற்குட்பட்ட திட்டங்கள் மற்றும் திட்டங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பதற்கு பொறுப்பு பெற்றதாகும். இந்தத்துறை சட்டப்படி பாலியல் துன்புறுத்தல் தடுப்பு சட்டத்தின் (POSH Act) தேவைகளை பூர்த்தி செய்ய உள் குழு (ICC) கொண்டுள்ளது. தற்போது, சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மைக்கான உள் திறன் அல்லது பணியாளர்களை இத் துறை கொண்டிருக்கவில்லை.

25. சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத்துறை (SWWED) "புதுமைப் பெண் திட்டத்தை" செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மற்றும் தற்போது தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்த தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. தகுதியுள்ள மாணவிகளை அடையாளம் கண்டு இணையதளத்தில் பதிவு செய்வதற்கு கல்வி நிறுவனங்கள் ஒரு முகமை அலுவலரை நியமிக்கின்றன.

## 26. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தில் (TNSDC) சுற்றுச்சூழல் மேலாண்மை

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் (TNSDC) "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் கல்லூரி மாணவர்களுடன் ESSA (சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்பு மதிப்பீடு) தயாரிப்பு கலந்தாய்வுகள் நடத்தப்பட்டன. இந்த திறன் மேம்பாட்டு படிப்புகள் அவர்களின் இளங்கலை பட்டப்படிப்புகளில் இணைக்கப்பட்டுள்ளன, மேலும் மின்சார வாகன பேட்டரி மேலாண்மை, துறைமுக கப்பல் சரக்கு போக்குவரத்து மேலாண்மை, பைதான் நிரலாக்க மொழி மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற தலைப்புகளை உள்ளடக்குகின்றன. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, சந்தையின் தற்போதைய தேவைகளை அறிந்து கொள்ள, தொழில் துறை பங்கு நிறுவனங்களுடன் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கலந்தாய்வு செய்யப்படுகிறது, இதன் காரணமாக படிப்புகள் பொதுவாக சந்தை தேவை மற்றும் சமீபத்திய பயன்பாட்டு அடிப்படையிலான அறிவுக்கு ஏற்ப புதுப்பிக்கப்படுகின்றன. துறை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வித்தாள்களுடனான கலந்துரையாடல்களின்படி, நடந்து வரும் திட்டங்கள் மற்றும் திட்டங்களில் சுற்றுச்சூழல் கருத்துகளை சேர்க்க குறைவான வாய்ப்பு உள்ளது. துறை அதன் பல்வேறு திட்டங்கள் மற்றும் பயிற்சிகளில் சுற்றுச்சூழல் கருத்துகளின் சில கூறுகளை உள்ளடக்கினாலும், முறையான சுற்றுச்சூழல் ஆபத்து மேலாண்மை முறை அல்லது நெறிமுறை இல்லை. சில பயிற்சிகள் நேரடியாக அல்லது மறைமுகமாக புதிய துறை வேலைகளுக்கான பசுமை திறன்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையவை.

## 27. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை துறை (MSMED)

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை துறை (MSMED) தொழில்நுட்ப மேம்பாடு, நவீனமயமாக்கல், ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு வசதிகள், நவீன மேலாண்மை நடைமுறைகளை அணுகுதல், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் பயிற்சி மூலம் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குகிறது. நிலையான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை MSMEs கள் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதன் மூலம் இந்த முயற்சிகள் மறைமுகமாக சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்கின்றன. தற்போது, MSMED துறையில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மைக்கான பணியாளர்கள் இல்லை.

## 28 . சுற்றுச்சூழல் மேலாண்மை – சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (MSMED)

தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (MSMED) சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்கிறது, மேலும் தமிழ்நாடு MSME கொள்கை அதன் கொள்கை குறிக்கோள்களில் சுற்றுச்சூழல் கருத்துகளை பொருத்தமாக இணைத்துள்ளது. கூடுதலாக, சுற்றுச்சூழல் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை MSMED ஒப்புக்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு, MSME பிரிவுகளில் மின்சார திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக "மின்சார தணிக்கை மற்றும் ஆற்றல் பாதுகாப்பு ஊக்குவிப்புத் திட்டம் (PEACE)" ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், பயன்படுத்தப்படும் முக்கிய ஆற்றல் மூலங்களை அடையாளம் காட்டுதல், ஆற்றல் பயன்பாட்டில் உள்ள குறைபாடுகளை அடையாளம் காட்டுதல், ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான பகுதிகளை அடையாளம் காட்டுதல், ஆற்றல் மூலங்களின் நுகர்வு நிலையை தீர்மானித்தல் மற்றும் தொழில்துறையில் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை பரிந்துரைப்பது ஆகும். PEACE திட்டம், MSME பிரிவுகளில் மின்சார திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் செலவுகளை குறைத்து உலக சந்தைகளில் போட்டித்திறனை மேம்படுத்த அனுமதிக்கிறது. இந்த திட்டத்தின் கீழ், அரசு ஒரு யூனிட்டுக்கு ரூ.1.00 என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, மின்சார தணிக்கை நடத்துவதற்கான செலவில் 75% ஐ திருப்பிச் செலுத்தும். மின்சார தணிக்கையின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான ஊக்கத்தொகையாக, ஆற்றல் திறன் மேம்பாட்டிற்காக மாற்றீடு செய்யப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மறுவடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் செலவில் 50% (அதிகபட்சம் ரூ.10 லட்சம் வரை) திருப்பி அளிக்கப்படும்.

29. தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (MSMED), MSME பிரிவுகளில் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை கட்டுப்பாட்டு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றின் கடைப்பாட்டு கணக்குகளை மதிப்பீடு செய்வதற்கும் தணிக்கைகளை நடத்துகிறது. இது, PEACE போன்ற மிகவும் பொறுத்தமான திட்டங்களின் மூலம் MSME க்கள் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைப்பிடிப்பதையும் சுற்றுச்சூழல் பொறுப்பை மேம்படுத்துவதையும் உறுதி செய்வதில் கவனம் செலுத்துவதை குறிக்கிறது. தொழில்நுட்ப மேம்பாடு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள MSME களிடையே நிலையான நடைமுறைகளை வளர்ப்பதற்கு இந்த துறை பங்களிப்பு செய்கிறது.

30. மேலும் தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை (MSMED) பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து செயல்படுகிறது. இதில்

அரசு அதிகாரிகள், தொழில் சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் MSME சங்கங்கள் ஆகியவை அடங்கும். இதன் மூலம், சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை கடைப்பாட்டு மட்டத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் பல்வேறு MSME செயல்பாடுகளுக்கான புதிய பசுமைசார் தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்வது ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது. இது MSME கள் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைப்பிடிப்பதையும் சுற்றுச்சூழல் பொறுப்பை மேம்படுத்துவதையும் உறுதி செய்வதில் கவனம் செலுத்துவதை குறிக்கிறது.

## 31. தொழில் வணிகத்துறை:

தொழில் மற்றும் வணிகத் துறை ) தொழில்முனைவோருக்கு ஆதரவு சேவைகளை வழங்குகிறது. இதில் லாபகரமான தொழில் முயற்சிகளை அடையாளம் காணுதல், நிதி நிறுவனங்கள் / வங்கிகளிடமிருந்து உதவி பெறுதல் ஆகியவை அடங்கும். மேலும், இவர்கள் தொழில்முனைவோர் மற்றும் திறன் பயிற்சி திட்டங்களை நடத்துகிறார்கள். முகாம்கள், கருத்தரங்குகள் போன்றவை மூலம் அரசின் கொள்கைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் MSME கொள்கையின்படி, MSME களுக்கு ஊக்கத்தொகைகள் மற்றும் மானியங்களை வழங்குவதற்கும் அதிகாரம் பெற்றுள்ளது. தொழில் மற்றும் வணிக ஆணையகத்தின் கீழ் வரும் முக்கிய திட்டங்கள்:

- வேலைவாய்ப்பற்ற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டம் (UYEGP)
- அண்ணல் அம்பேத்கார் வணிக சாம்பியன் திட்டம் (AABCS)
- புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் வளர்ச்சி திட்டம் (NEEDS)

தற்போது, சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மைக்கான பணியாளர்கள் இல்லை.

## 32. தொழில் மற்றும் வணிகத்துறையில் சுற்றுச்சூழல் மேலாண்மை

தொழில் மற்றும் வணிகத் துறை நிலையான தொழில்துறை நடைமுறைகள், மாசு கட்டுப்பாடு மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இதில் பின்வருவனற்றை உள்ளடக்கலாம்: தொழிற்சாலைக் கழிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துதல், சுத்தமான தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்குமாறு தொழில்களுக்கு ஊக்கப்படுத்துதல், சுற்றுச்சூழல் தரங்களை கடைப்பிடிப்பதை உறுதி செய்தல். இந்தத்துறையின் "தர சான்றிதழ் கட்டணங்களுக்கான திருப்பிச் செலுத்துதல் திட்டம், MSME களை செயல்முறை மற்றும் தயாரிப்புக்கான தரத் தரங்கள்/ சான்றிதழ்களைப்

பெறுமாறு ஊக்குவிக்கிறது. இதில் ISO 9000/ISO 14001/ISO 22000/ ஆபத்து பகுப்பாய்வு மற்றும் முக்கியக்கட்ட கட்டுப்பாட்டுப் புள்ளி (HACCP)/ நல்ல சுகாதார நடைமுறைகள் (GHP)/ நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழ்கள், BIS சான்றிதழ், பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவு (ZED) மதிப்பீடு அல்லது இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியுள்ள அதிகாரத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த சர்வதேச தர சான்றிதழும் அடங்கும்.

தேசிய அளவிலான சான்றிதழ் பெறுவதற்கு ரூ.2.00 லட்சம் வரையிலும், சர்வதேச அளவிலான சான்றிதழ் பெறுவதற்கு ரூ.10.00 லட்சம் வரையிலும் ஆலோசனை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களுக்கு செய்யப்படும் தொகையை அரசு திருப்பிச் செலுத்துகிறது. 2020–21 நிதிய ஆண்டில், மாநிலத்தில் உள்ள 92 MSME களுக்கு ரூ.60.35 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், MSME பிரிவுகளில் மின்சார திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக PEACE திட்டத்துடன் தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையகம் செயல்படுகிறது. இதன் மூலம் செலவுகளை குறைத்து உலக சந்தைகளில் போட்டித்திறனை மேம்படுத்த அனுமதிக்கிறது.

தனது சேவைகளில் சுற்றுச்சூழல் மேலாண்மையைக் கண்காணிப்பதற்காக தொழில் வணிகத்துறைக்கு ஒரு அர்ப்பணிப்புடைய குழு/பணியாளர்கள் இல்லாதபோதும், தனது நிறுவனங்கள்/செயல்பாடுகளில் நிலையான தொழில்துறை நடைமுறைகள், மாசு கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய சுற்றுச்சூழல் விதிமுறைகளை கடைப்பிடிப்பது மற்றும் சுற்றுச்சூழல் தரங்களை கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது.

## 33. தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) / ஸ்டார்ட்அப் TN

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) அல்லது ஸ்டார்ட்அப் TN என்பது கீழ்க்கண்ட துறைகளில் புத்தாக்கத்திறனை ஆதரிப்பதிலும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடுகளை ஊக்குவிப்பதிலும், உட்கட்டமைப்பு ஆதரவு, அறிவு உருவாக்கம், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் திறமையான மனிதவளம் ஆகியவற்றினை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது: வேளாண்மை, உற்பத்தி, மருத்துவம், கல்வி, போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் (logistics), சமூக துறை, நகர்ப்புற வளர்ச்சி, சுற்றுச்சூழல்

## 34. ஸ்டார்ட்அப் TN மற்றும் பெண்கள் தொழில்முனைவோர் ஆதரவு

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) அல்லது ஸ்டார்ட்அப் TN பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கு சிறந்த உதவியை வழங்குகிறது. TANSEED 6.0 திட்டத்தின் கீழ் மொத்த உதவியில் 25%

பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஸ்டார்ட்அப் TN பின்வருவனவற்றை வழங்குகிறது: பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான பிரத்யேகமான மற்றும் மானிய விலையில் கூட்டுப்பணி இடங்கள், இலக்கு வைத்த பயிற்சி திட்டங்கள், பெண்களுக்கான வழிகாட்டி திட்டங்கள், பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான மற்றும் பெண்கள் தொழில்நுட்பம் சார்ந்த (FemTech) ஸ்டார்ட்அப்களுக்கான பிரத்யேக துரிதப்படுத்தும் திட்டம், பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கான முதலீட்டாளர் வட்டங்கள்பிப்ரவரி 2024 நிலவரப்படி, 2021 முதல் இதுவரை நடந்த ஐந்து TANSEED திட்டங்களில், 51 பெண்கள் தலைமையிலான ஸ்டார்ட்அப்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு பட்டியலிடப்பட்ட சாதி / பட்டியலிடப்பட்ட பழங்குடியின ஸ்டார்ட்அப் நிதி ஒன்றையும் அவர்கள் கொண்டுள்ளனர், மேலும் பிப்ரவரி 2024 நிலவரப்படி, 24 எஸ்.சி./எஸ்.டி. தலைமையிலான ஸ்டார்ட்அப்கள் அவர்களின் பட்டியலில் உள்ளன. ஸ்டார்ட்அப்கள் இடையே திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை ஸ்டார்ட்அப் TN நடத்துகிறது. மேலும், POSH சட்டத்தின் கீழ் உள் குழுவையும் (ICC) அமைத்துள்ளனர். தற்போது, சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மைக்கான பணியாளர்கள் இல்லை.

## 35. ஸ்டார்ட்அப் TN / TANSIM இல் சுற்றுச்சூழல் மேலாண்மை

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) அல்லது ஸ்டார்ட்அப் TN சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை உணர்கிறது, மேலும் ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழலில் சுற்றுச்சூழல் கருத்துகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளை ஊக்குவிக்கிறது. தமிழ்நாட்டில் புதுமை மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதே TANSIM இன் நோக்கம், இது மறைமுகமாக நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கிறது. ஸ்டார்ட்அப்களை ஆதரிப்பதன் மூலமும், புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதன் மூலமும், சுற்றுச்சூழல் சவால்களை எதிர்த்துப் போராடும் மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிக்கும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளின் வளர்ச்சியை TANSIM ஊக்குவிக்கிறது.

## 36. தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) – சுற்றுச்சூழல் முனைப்பு

தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் புதுமை மிஷன் (TANSIM) தொழில் காப்பு மையங்களை ஆதரிப்பதன் மூலம் பல ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல்களுக்கு ஆதரவு வழங்குகிறது. இது புதிய மற்றும் புதுமையான யோசனைகள் மற்றும் ஸ்டார்ட்அப்களுக்கான தொடர்ச்சியான அளவில் உருவாக்க உதவியுள்ளது.

சென்னையில் உள்ள கிரசென்ட் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜியில் இயங்கும் கிரசென்ட் தொழில்முனவாளர் மற்றும் தொழில்

காப்பு கவுன்சில் உடன் நடத்தப்பட்ட ESSA கலந்தாய்வுகள், தற்போது இருக்கும் தொழில் காப்பு மையங்கள் சில பசுமைசார் துறைகளில் கவனம் செலுத்தி வருவதை உறுதிப்படுத்தியுள்ளன. இதில் உயிரியல் அறிவியல் ஸ்டார்ட்அப்கள் (உயிர்–எரிசக்தி, உயிர்–மருந்து, உயிர்–சேவைகள், உயிர்–தொழிற்சாலைகள்) மற்றும் சுத்தமான போக்குவரத்து (டிரோன் தொழில்நுட்பம், ஸ்மார்ட் மற்றும் புதைபடிவமில்லா எரிபொருள் வாகனங்கள், மின்சார வாகனங்கள், மின்சார வாகன பேட்டரி மேலாண்மை மற்றும் தன்னியக்க வழிகாட்டி சேவைகள்)) போன்ற துறைகள் அடங்கும்.

தொழில் காப்பு மையம் என்பது ஸ்டார்ட்அப்களுக்கான ஒரு–நிறுத்த கடை போன்றது. இது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்முனைவோர் மற்றும் புதுமை சார்ந்த சுற்றுச்சூழலை உருவாக்குகிறது. மேலும், தொழில் காப்பு நிறுவனங்கள் சிறந்த ESG நடைமுறைகளை செயல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதன் மூலம் ESG கவலைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இது சந்தை தேவைகளுக்கும் முதலீட்டு சமூகத்தின் வலுவான எதிர்பார்ப்புகளிக்கும் பதிலளிப்பதாகும்.

இந்த கலந்தாய்வுகளின் போது, ஸ்டார்ட்அப் சமூகத்தினர் மத்தியில், பொருத்தமான ESG வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தெளிவின்மை இருப்பதாக கண்டறியப்பட்டது. குறிப்பாக, தேவைப்பாடுகள் தயாரிப்பைப் பொறுத்து பெரிதும் மாறுபடுவதால் இது ஏற்படுகிறது.

37. மாவட்ட அளவில், திட்டக் குழு (project team) SWWED, MSME மற்றும் TNSDC ஆகிய துறைகளிலிருந்து செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களைக் கொண்டிருக்கும். இது மாவட்ட ஆட்சியாளருக்கு (District Collector) அறிக்கை சமர்ப்பிக்கும். மேலும், மாவட்டக் குழு தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் (National Urban Livelihood Mission) உதவி திட்ட அலுவலகங்கள் (Assistance Project Offices – APO) உடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் செயல்படும்.

## சமூக இடர் மேலாண்மைக்கான நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்:

### 38. குறைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள்:

தமிழ்நாடு மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொது மக்கள் குறை தீர்க்கும் முதலமைச்சர் உதவி மைய மேலாண்மை முறை (IIPGCMS) உள்ளது. மக்கள் அரசின் திட்டங்கள் அல்லது சேவைகள் மற்றும் பிற பொது சிக்கல்கள் தொடர்பான குறைகளை மொபைல் செயலி, உதவி எண் (1100), மின்னஞ்சல், இணையதளம், தபால், ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக் மூலம் சமர்ப்பிக்கலாம். குறைகள் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்படும், ஒவ்வொரு துறையும் தனித்தனி சேவை நிலை ஒப்பந்தங்களை (SLA) கொண்டுள்ளது, இது குறை தீர்ப்பதற்கான காலக்கெடுவை வழங்குகிறது.

தேசிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாநிலத்திலும் 24 மணிநேர பெண்கள் உதவி எண் உள்ளது, இது வன்முறைக்கு ஆளாகும் பெண்களுக்கு பரிந்துரைகள் மூலம் 24 மணிநேர உடனடி மற்றும் அவசர கால பதிலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்து செயல்படுத்தும் நிறுவனங்களும் தங்கள் குறை தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளன, அங்கு புகார்கள் ஒரு இணையதளம் அல்லது தொலைபேசி எண் மூலம் பதிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. பல்வேறு திட்டங்கள் மற்றும் முமமைகளும் புகார்களை பதிவு செய்தல் மற்றும் தீர்ப்பதற்கான தனித்தனி இணையதளங்கள், சேவை தளங்கள், பயன்பாடுகள் அல்லது எண்களைக் கொண்டுள்ளன, அத்துடன் நியமிக்கப்பட்ட மைய அதிகாரிகள் / குழுக்களையும் கொண்டுள்ளன.

### 39 . மதிப்பீட்டில் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன:

(i) தெளிவான மற்றும் வெளிப்படையான குறைதீர்ப்பு வழிமுறைகள் செயல்முறை, தகவல் தொடர்பு செயல்முறை இல்லாதது;

(ii) பெறப்பட்ட குறைகளை பராமரிப்பதற்கான பதிவேட்டை முறையாக பராமரிப்பதற்கான பொருந்தாத வடிவங்கள்;

(iii) செயல்படுத்தும் நிறுவனங்கள், பயிற்சி மையங்கள், கல்லூரிகள் போன்றவற்றின் அலுவலகங்களில் அமைந்துள்ள குறை தீர்ப்பு முறைகள் பற்றிய போதிய விளம்பரம் இல்லாத தன்மை

(iv) தெளிவான மேல்முறையீட்டு செயல்முறை இல்லாதது;

(v) SEA/SH குறைகளை கையாள்வதற்கான போதிய திறன் மற்றும் அறிவு செயல்படுத்தப்பட்டு வரும் குறை தீர்ப்பு முறைகளில் (GRMs) இல்லாதது;

(vi) ரகசிய குறைகளுக்கான ஏற்பாடுகள் இல்லாதது;

(vii) பெறப்பட்ட குறைகளை கண்காணிப்பது மற்றும் மதிப்பீடு செய்வது ஆகியவற்றில் உள்ள போதாமைகள்.

### 40. பாலியல் சுரண்டல் மற்றும் துன்புறுத்தல் / பாலியல் தொல்லை தடுப்பு நடவடிக்கைகள்:

செயல்படுத்தும் நிறுவனங்களில் உட்குழுக்கள் (ICCக்கள்) அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான குறை தீர்ப்பு முறைகள் (GRM) குறிப்பாக SEA/SH குறைகளை கையாள்வதற்கு தயாராக இல்லை. மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை (DSWWE) உள்ள குறை தீர்ப்பு முறை (GRM) பாலியல் வன்முறை, SEA/SH தொடர்பான புகார்களை கையாள்வதற்கு தகுதி பெற்றது. இது பாலியல் தொல்லை வழக்குகளை கையாள்வது,

பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்குமிடம், சுகாதாரம், சட்ட உதவி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கியது. மாவட்ட அளவில் பாதுகாப்பு அலுவலர்கள், குடும்ப வன்முறை வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்குகளைத் தாக்கல் செய்வதிலும் நிவாரணம் பெறுவதிலும் உதவி செய்ய நியமிக்கப்படுகிறார்கள்

41. மதிப்பீட்டில், உள் குழு (ICC) மற்றும் POSH தேவைகள் பற்றிய பரந்த அளவிலான விளம்பரத்தை உறுதி செய்வதில் குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் குறித்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துவதும் அவசியம். இந்த நடவடிக்கைகள் குறிப்பாக SEA/SH அபாயத்திற்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய இளம் பெண்களின் தேவைகளையும் கவனிக்க வேண்டும்.

## 42. கூட்டு நிறுவனங்களின் ஈடுபாடு:

செயல்படுத்தும் நிறுவனங்கள் (IAs) தங்கள் திட்டங்களின் ஒரு பகுதியாக பொது முகத்தைக் கொண்டுள்ளன, மேலும் சில சமயங்களில் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தகவல்களை பரப்புவதற்காகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இந்த நடவடிக்கைகளில் பங்குதாரர்கள் பொது மக்கள், குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதிய குடிமக்கள், திருநங்கையர், பயிற்சி கூட்டு நிறுவனங்கள், தொழில் துறை பயிகூட்டு நிறுவனங்கள் பயனாளிகள் போன்றோர் அடங்குவர்.

மதிப்பீட்டின்படி, பங்குதாரர் ஈடுபாடு தற்போது திட்டமிடப்படாத மற்றும் ஒழுங்கற்ற முறையில் உள்ளது. தகவல்களைப் பகிர்தல், கருத்துக்களைப் பெறுதல் மற்றும் பொதுவாக வலைப்பின்னல் அமைப்பதற்காக பயனாளிகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் தொடர்ந்து திட்டமிடப்பட்ட அடிப்படையில் ஈடுபடுவதற்கான விரிவான திட்டம் எதுவும் இல்லை. பதிவு செய்யப்படும், தொடர்ச்சியான மற்றும் பதிலளிக்கும் பங்குதாரர் ஈடுபாடு முக்கியமானது, இதன் மூலம் கருத்துக்கள் திட்ட வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தலில் மேலே செல்ல முடியும்.

## 43. சமூக இணைப்பு:

தற்போதுள்ள திட்டங்களில் பெண்கள், கைவிடப்பட்ட விதவைகள், ஆதிதமிழர்/பழங்குடியினத்தவர் (SC/ST), மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் போன்ற பலவீனமான மற்றும் வாய்ப்பற்ற (deprived – வாய்ப்பற்ற) குழுக்களை உள்ளடக்குவதற்கான குறிப்பிட்ட ஏற்பாடுகள் உள்ளன.

### 44. தொழிலாளர் சட்ட இணக்கம்:

இந்த திட்டத்தில் குறைந்த அளவிலான கட்டுமான பணிகளே, பணிபுரியும் பெண்களின் விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான பணிகளாக இருக்கும் என்று மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. தேவைப்பட்டால் ஏதேனும் கட்டுமான பணிகள் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்படும். செயல்படுத்தும் நிறுவனம் வேலைகளை செயல்படுத்துவதையும் மேற்பார்வையிடுவதையும் மேற்கொள்ளும். மேற்பார்வை என்பது ஒப்பந்ததாரர் சட்டப்பூர்வமாகவும் ஒப்பந்தப்படிவும் தேவைப்படும் அளவுக்கு தொழிலாளர் சட்டங்களுக்கு இணங்குவதை உறுதிசெய்வதையும் கண்காணிப்பதையும் உள்ளடக்கும்.

தற்போது, கட்டுமான பணிகளுக்கான தள–குறிப்பிட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை திட்டங்கள் (E&S Management Plans) மற்றும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (OHS) கண்காணிப்புக்கான வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகளின் படி உள்ளன. அடிப்படை இணக்கத்தை உறுதி செய்ய தகுதி சரிபார்ப்பு பட்டியல்களை (due diligence checklists) பயன்படுத்தலாம்.

### கூட்டு நிறுவனங்கள் கலந்தாய்வு:

45. பல்வேறு கூட்டு நிறுவனங்களுடன் விரிவான கலந்தாய்வு நடத்திய பின்னர் இந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனங்கள், பயிற்சி பங்குதாரர்கள், கல்லூரிகள், திட்டத்தின் கீழ் வரும் பல்வேறு திட்டங்களின் பயனாளிகள், தொழில் முனைவோர் உருவாக்க மையங்கள், பணிபுரியும் பெண்களின் விடுதி இயக்குபவர்கள், மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்களில் உள்ள குறை தீர்ப்பு அலுவலர்கள் ஆகியோர் அடங்குவர். பயனாளிகளுடன் நேரடியாக தொடர்புகொள்வதற்கும், பயிற்சி மையங்கள், உருவாக்க மையங்கள் மற்றும் பல்வேறு செயல்படுத்தும் துறைகளின் செயல்பாடுகளை கவனிப்பதற்கும் களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கலந்துரையாடல்களில் வெளிப்பட்ட முக்கிய கருத்துக்கள்:

- திட்டத்தின் நன்மைகளை அடைவதில் உள்ள சவால்கள்: உதாரணமாக, புதுமை பெண் திட்டத்தின் பயனாளிகளுக்கு வங்கிகளுடன் ஒருங்கிணைப்பு பிரச்சினைகள் காரணமாக நிதி பெறுவதில் சிரமம்.
- குறை தீர்ப்பு வழிமுறைகள் குறித்த பயனாளிகள், இயக்குபவர்கள் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்களின் அனுபவங்கள் கலவையாக உள்ளன.

- புதுமை பெண் மற்றும் நான் முதலவன் போன்ற திட்டங்கள், பெண் பயனாளிகளுக்கு உயர்கல்வி, தொழில் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன, இதன் மூலம் அவர்கள் சமூக–பொருளாதார கட்டுப்பாடுகளை மீற அனுமதிக்கிறது.
- பெண் தொழில்முனைவோர் கடனம் மற்றும் நிதி பெறுவதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். முக்கிய சவால்களில் வங்கிகளின் ஆவணக் குறிப்பு மற்றும் பிற தேவைகள், போதுமான பயிற்சி இல்லாதது, போதுமான தகவல் இல்லாதது மற்றும் தொழில்முனைவோர் சுற்றுச்சூழலுடன் இணைவதற்கான தளங்கள் இல்லாதது ஆகியவை அடங்கும்.

## திட்ட செயல்பாட்டு திட்டத்திற்கான (PAP) பரிந்துரைகள் மற்றும் உள்ளீடுகள் (Recommendations and Inputs to Program Action Plan)

46. வங்கியின் திட்டம், சில உயர்–ஆபத்து நடவடிக்கைகள் PforR திட்ட (Performance for Results – முடிவுகளுக்கான செயல்பாடு) நடவடிக்கையில் சேர்க்கப்பட தகுதியற்றவை என்பதை உறுதி செய்வதற்காக மதிப்பாய்வு செய்யப்பட்டது. செயல்படுத்தும் காலத்தில், தமிழ்நாடு அரசு இத்தகைய அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்து விலக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் ESSA இன் 10வது பகுதியில் உள்ள விலக்கு பட்டியலில் (Exclusion List) பட்டியலிடப்பட்டுள்ளன.

### 47. குறை தீர்ப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல்:

ஒரே நேரத்தில் பல்வேறு இணையான குறை தீர்ப்பு வழிமுறைகள் (Grievance Redressal Mechanisms – GRM) இயங்கி வருகின்றன. இருப்பினும், சில குறைபாடுகள் உள்ளன. நேரத்தோடு பதிலளித்தல் மற்றும் தரவ கண்காணிப்பு ஆகியவற்றில் எந்தவொரு நிலையான சேவை தரநிலைகளும் இல்லை. குறை தீர்ப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவது, செயல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் பயனாளிகள், குறிப்பாக பெண்கள் ஆகியோருக்கான GRM குறித்த உள்ளடக்கிய விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகளுடன் இருக்கும்.

### பங்குதாரர் ஈடுபாட்டை வலுப்படுத்துதல்:

மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான பயனாளிகளைக் கொண்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இருப்பினும், பங்குதாரர் ஈடுபாட்டில் கவனம் செலுத்தாததால் இந்த சமூக நலத்திட்டங்களின் சாத்தியமான நன்மைகள் குறைந்துவிடுகின்றன. பங்குதாரர் ஈடுபாட்டு நடவடிக்கைகள், பயனாளிகள் ஒருவருக்கொருவர், தொழில் துறை பங்காளிகள் மற்றும்

ஒட்டுமொத்த தொழில்முறை சூழலுடன் தொடர்புகொள்வதற்கான மன்றங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரிப்பது, செயல்பாட்டு தலையீடுகளின் மதிப்பை மேம்படுத்தும்.

### 49. பயிற்சி தொகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மை கருத்துக்களைச் சேர்ப்பது தொடர்:

தொழில்முனைவோர் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் தற்போதைய பயிற்சிகள், வணிக மற்றும் தொழில் வாழ்க்கையின் தேவைகளை பூர்த்தி செய்ய அவர்களை ஆதரிக்கின்றன. பயிற்சி தொகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலைத்தன்மையைக் கருத்தில் கொள்வது, இந்த கருத்துக்களை பணியாளர் படையில் பிரதான மையப்படுத்த உதவும்.

### 50. SEA/SH ஆபத்து கையாளுதலை வலுப்படுத்துதல்:

திட்டத்தின் பல பயனாளிகள் பெண்கள் மற்றும் இளம்பருவ பெண்கள் ஆவர். இந்த குழுக்கள் SEA/SH அபாயங்களுக்கு ஆளாகக்கூடியவை. POSH சட்டத்தால் கட்டளையிடப்பட்டபடி அனைத்து செயல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி பங்காளிகளும் போதுமான முறைகளைக் கொண்டிருப்பது, ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் மத்தியில் தொடர் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்துவது, அவர்களின் வளாகங்களில் தேவையான அனைத்து தகவல்களையும் குறிப்பாக பயனாளிகளுடன் தொடர்பு இருக்கும் இடங்களில் காட்சிப்படுத்துவது அவசியம். குறை தீர்ப்பு கையாளும் அதிகாரிகளுக்கும் SEA/SH குறைபாடுகளை கையாள்வதில் உணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இது அனைத்து நிலைகளிலும் உள்ள அனைத்து செயல்படுத்தும் நிறுவனங்களிலும் செயல்படுத்தப்பட வேண்டும்.

### 51. சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகளை வலுப்படுத்துதல் மற்றும் விடுதிகள் மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்களின் செயல்பாடுகளில் பசுமைசார் நடைமுறைகளை ஊக்குவித்தல் –

புதுப்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் தளத்தில் ஏதேனும் இருந்தால் சிறு கட்டுமான பணிகளின் போது மாசுபாடு மேலாண்மை மற்றும் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (OHS) குறித்த உள்ள விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். காலாண்டு சுற்றுச்சூழல் மற்றும் சமூக (E&S) அறிக்கைகள் (PMU அறிக்கைகளுடன் இணைக்கப்பட்டவை) அனைத்து செயல்படுத்தப்பட்டு வரும் புதுப்பித்தல் தளங்கள் மற்றும் பராமரிப்பு மற்றும் இயக்க (O&M) நடவடிக்கைகளில் மாசுபாடு மேலாண்மை மற்றும் OHS கண்காணிப்பு குறித்த ஒரு பிரத்யேக பிரிவை கொண்டிருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட விடுதிகள் மற்றும் பராமரிப்பு வசதிகளில் நல்ல சுற்றுச்சூழல் நடைமுறைகளை (கழிவு பிரித்தல், மறுசுழற்சி, மழைநீர் சேகரிப்பு, சுற்றுச்சூழல் திட்டங்கள்,

நிலையான செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்றவை) ஊக்குவிப்பதற்காக PMU E&S பணியாளர்கள் மற்றும் உலக வங்கி ESSகள் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை (SWWED) உடன் இணைந்து பணியாற்ற பரிந்துரைக்கப்படுகிறது. மேலும், இந்த வசதிகளின் செயல்பாடுகளில் சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு நெறிமுறை/முறைமையை (protocol/system) பரவலாக்குதல்.

### 52. PMUவில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மை திறனை வலுப்படுத்துதல்:

அனைத்து செயல்படுத்தும் நிறுவனங்கள் முழுவதும் உள்ள அனைத்து சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான மைய நபராக PMUவில் ஒரு சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிபுணர் தேவைப்படுவார்.

**திட்ட நடவடிக்கைத் திட்டம்**

**53. மேலே உள்ள பரிந்துரைகளில் இருந்து, பின்வரும் திட்ட நடவடிக்கை திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன:**

| செயல் திட்டங்கள் | நடைமுறை படுத்துதல் துறை | காலக்கெடு | முடிவு குறியீடு |
|---|---|---|---|
| SPID/PMU மற்றும் முன்னுரிமை முகமைப்பிரிவுகளில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆபத்து மேலாண்மைக்கான முகமை அலுவலரை நியமனம் செய்யவும் | SPID /PMU | 31–Oct–2024 | PMU மற்றும் முன்னுரிமை முகமைப்பிரிவுகளில் E&S முன்கூட்டிய நபர்கள் நியமிக்கப்பட்டது. |
| நிர்வாகத் துறைகளுக்கிடையேயும், செயல்படுத்தும் நிறுவனங்களுக்கிடையேயும் குறைகளைத் தீர்ப்பதற்கான மேலாண்மை முறைகளை வலுப்படுத்த செயல்பாட்டு நடைமுறை (SOP) ஐ உருவாக்குதல் | SPID/ PMU | 31–Dec – 2024 | SPID/PMU அனைத்து முன்னுரிமைத் துறைகளாலும் செயல்படுத்தப்பட வேண்டிய குறைகளை தீர்ப்பதற்கான (GRM) செயல்பாட்டு நடைமுறை (SOP) ஐ தயாரிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | | இது குறைகளை தீர்ப்பதற்கான செயல்முறை, பொறுப்பான பணியாளர்கள், பிரச்சனை தீர்வு நிலை (escalation matrix), கருத்து சுழற்சி (feedback loop), குறைகள் தெரிவித்தல் பதிவு செய்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கும். |
| திட்ட செயல்பாட்டில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் உள்ளடக்கம் (பாலின அம்சங்கள் உட்பட) மற்றும் குடிமக்கள் ஈடுபாட்டு நடவடிக்கைகள் (குறைகளை தீர்ப்பதற்கான மேலாண்மை (GRM), தகவல் தொடர்பு, சமூக பொறுப்பு) ஆகியவற்றை இணைப்பதற்கான வழிகாட்டுதல் மற்றும் செயல் திட்டத்தை உருவாக்குதல் | SPID/ PMU | 31-Dec-2024 | SPID/PMU ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் செயல்பாட்டு திட்டத்தை செயல்படுத்த தயாராக இருப்பதை பகிர்ந்து கொள்ளுதல். |
| குறுகிய கால பயிற்சி திட்டங்களில் சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் நிலைத்திருப்பு நடைமுறைகள் குறித்த கட்டாய பயிற்சி படிப்புகளை சேர்க்கவும் | SPID/ PMU | 31-Dec-2024 | PMU மற்றும் முன்னுரிமை முகமைப்பிரிவுகளில் E&S முன்கூட்டிய நபர்கள் நியமிக்கப்பட்டது. |